ஒன்றிய உள்துறை அமைச்சர்

# அமித்ஷா சொன்னது அனைத்தும் பொய்!

## சி.பி.ஐ. மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் குற்றச்சாட்டு!

ராஜபாளையம், ஜூன் 14-

‘அமித்ஷா சொன்னது அனைத்தும் பொய்’ என்று சிபி.ஐ. மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்து உள்ளார்.



விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் நேற்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அமித்ஷா பேசும்போது காமராஜர், மூப்பனார் ஆகியோர் பிரதமராக வர இருந்த வாய்ப்பை தி.மு.க. தடுத்து நிறுத்தி விட்டதாக கூறியிருக்கிறார். ஆனால் காமராஜர் பிரதமராவதற்கு விருப்பம் தெரிவிக்க வில்லை. நேருவின் மறைவுக்குப் பிறகு லால்பகதூர் சாஸ்திரியும், அதன்பின் இந்திரா காந்தியும் பிரதமராக வருவதற்கு காமராஜர்தான் முழு பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதேபோல மூப்பனாரும் பிரதமராவதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. மாற்று அணியை உருவாக்குவதற்கே கவனம் செலுத்தினார். பிரதமராக அவருக்கு வாய்ப்பு இருந்தும் ஆர்வம் காட்டவில்லை. அவருக்கு இருந்த வாய்ப்பை தி.மு.க.வும் தடுக்கவில்லை.

கலைஞரை, குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட வலியுறுத்தியபோதும் அவர் அதை மறுத்துவிட்டார். உண்மை இவ்வாறு இருக்கும் நிலையில் அமித்ஷா தவறான தகவல்களை, பொய்யான தகவல்களை தமிழ்நாட்டில் கட்டவிழ்த்து விட்டு சென்றிருக்கிறார். வருங்காலத்தில் தமிழர் பிரதமராக வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். ஆனால் அந்த வாய்ப்பு வரும் தேர்தலில் இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

முதல்வரின் கேள்விக்கு நேரிடையாக பதிலளிக்க முடியாத அமித்ஷா!

# மோடி அரசால் தமிழ்நாட்டிற்கு நன்மைகளை விட தீமைகளே அதிகம்!

## விவசாயிகள்தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, ஜூன் 14-

விவசாயிகள் தொழிலாளர் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்பது ஆண்டு கால பாரதிய ஜனதா கட்சியின் ஒன்றிய அரசில் தமிழ்நாட்டுக்கு செய்த நன்மைகள், புதிய திட்டங்கள் என்ன என்பதை ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா விளக்குவாரா? என தமிழ்நாட்டு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார். அந்த கேள்வியில் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்து கிடக்கின்றன. இதற்கு நேரடியாக பதில் சொல்ல முடியாத உள்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு செய்துள்ள நிதி ஒதுக்கீடு குறித்து பேசி விட்டு சென்றிருக்கிறார், நிதி ஒதுக்கீடு என்பது ஒவ்வொரு ஆண்டும் துறை வாரியாக நடைபெறக் கூடிய ஒரு தொடர் நிகழ்வாகும்.

ஒன்றிய அரசாக இருந்தாலும், மாநில அரசுகளாக இருந்தாலும் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு துறைக்கும் நிதி ஒதுக்கீடு செய்வது தொடர் நடவடிக்கையாகும். இந்த நிதி ஒதுக்கீடு என்பது ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாவது இயற்கையாகும். அந்த அடிப்படையில் தான் ஒன்றிய மோடி அரசும் தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இப்படி துறைவாரியாக ஒதுக்கிய நிதி பட்டியலை வெளியிட்டு விட்டு, முதல்வர் கேட்ட கேள்விக்கு நேரடியாக பதில் சொல்ல முடியாமல் நழுவியுள்ளார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. இந்த நிதி ஒதுக்கீடு கூட தமிழ்நாட்டில் இருந்து ஜி.எஸ்.டி. மூலம் ஒன்றிய அரசு வசூலித்த தொகையில் 20 விழுக்காடு கூட தமிழ்நாட்டுக்கு ஒதுக்கிடவில்லை. ஆனால் தமிழ்நாட்டு மக்களின் வரிப் பணத்தை உத்தரபிரதேசம் போன்ற பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு வாரி வழங்கி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வெற்று தம்பட்டம் அடிக்கிறார் அமித்ஷா!**

அடுத்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசும் மோடி அவர்களும் பெரும்பங்காற்றி உள்ளதாக அமைச்சர் அமித்ஷா தம்பட்டம் அடித்துள்ளார். மொழியின் பெருமையை பேசுவது மட்டும் வளர்ச்சிக்கு உதவாது. கடந்த 9 ஆண்டு காலத்தில் தமிழ் மொழிக்கு ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்துள்ள நிதியின் அளவு எவ்வளவு? சமஸ்கிருத வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்துள்ள நிதியின் அளவு எவ்வளவு? என்பதை ஒப்பீடு செய்ய அமைச்சர் தயாரா? சுமஸ்கிருதத்திற்கு ரூ.198.83 கோடி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் தமிழுக்கு ரூ.11.86 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுதான் தமிழ் வளர்ச்சி செய்ததா?



அடுத்து நீட் தேர்வை தமிழில் எழுதுவதற்கு அனுமதி அளித்ததாக அமித்ஷா கூறுகிறார். நீட் தேர்வு வேண்டாம் என சட்டப் பேரவையில் தீர்மானம் போட்டு அதை அனுப்பி வைத்தால் இன்று வரை அதற்கு அங்கீகாரம் வழங்காமல் ஒன்றிய அரசும் ஆளுநரும் இழுத்தடித்து வருகிறார்கள். இந்த நீட் தேர்வு ஆயிரக்கணக்கான கிராமப்புற மாணவர்களின் மருத்துவ கல்வி கனவை சிதைத்து, பல மாணவர்களின் உயிரை பறித்து வருகிறது. ஆகவே நீட் ரத்து செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை வைக்கிற நிலையில், நீட்டை தமிழில் எழுத அனுமதித்ததாக கூறுவது வேடிக்கையான ஒன்றாகும். அது விஷத்தை தங்கக் கோப்பையில் குடிப்பதற்கு அனுமதித்ததற்கு சமமாகும்.

**இதுதான் பா.ஜ.க.வின் பண்பாடு!**

தமிழ்நாட்டில் போடப்பட்டுள்ள பெருவாரியான சாலைகள் எல்லாம் காங்கிரஸ் தலைமையிலான ஒன்றிய அரசில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இடம் பெற்றிருந்த அன்றைய அமைச்சர் டி.ஆர்.பாலு அவர்களால் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் என்பதை இந்த நாடறியும். மதுரைக்கு அறிவித்த எய்ம்ஸ் மருத்துவமனையைக் கூட இன்னும் கட்டுவதற்கு ஒன்றிய அரசுக்கு மனமில்லை. ஆனால் இது குறித்து கேட்டால் அமைச்சர் அமித்ஷா அவர்கள் இது சம்பந்தமாக அ.தி.மு.க. அரசை கேளுங்கள் என்று தன்னுடைய தோழமைக் கட்சியை காட்டிக் கொடுக்கும் செயலில் ஈடுபட்டுள்ளார். பாரதிய ஜனதாவின் பண்பாடு, உடன் இருப்பவர்களை அழித்து அதன் மீது கொடியேற்றுவதுதான் என்பதை இதன் மூலம் நிரூபித்திருக்கிறார். மோடி பிரதமராவதற்கு முன்பு தமிழ்நாட்டில் பிரச்சாரத்திற்கு வந்த பொழுது சுண்டைக்காய் நாடு இலங்கை. இந்தியாவை பார்த்து பயப்படவில்லை. நான் ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லாமல் பாதுகாப்பாக தொழில் செய்வார்கள் என்று உறுதி அளித்தார். ஆனால் இன்று வரை தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதும், துன்புறுத்துவதும் தொடர்கதையாக இருக்கிறது.

ஆகவே மோடி அரசால் தமிழ்நாட்டிற்கு நேரடியாக செய்தது என்ன? என்னென்ன புதிய திட்டங்களை தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்தி இருக்கிறது. அந்தத் திட்டங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்கிற பட்டியலை அமித்ஷாவால் வெளியிட முடியவில்லை.

ஒன்பது ஆண்டுகால ஒன்றிய பா.ஜ.க. அரசின் மூலம் தமிழ்நாட்டுக்கு விளைந்தது எல்லாம் தீமையே. இந்தி திணிப்பு, சமஸ்கிருதத் திணிப்பு, சமஸ்கிருதத்திற்கு கோடிக் கணக்கில் பண ஒதுக்கீடு, தமிழுக்கு புறக்கணிப்பு, ஆட்சிக்கு வருவதற்கு முன்பு விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவேன் என்று உறுதி அளித்த மோடி அவர்கள் ஆட்சிக்கு வந்தபின் மூன்று வேளாண் சட்டங்களை கொண்டு வந்து விவசாயிகளை வஞ்சிக்க முயன்றது, ஆளுநர் மூலம் போட்டி அரசு நடத்த முயன்றது, தமிழ்நாடு அரசு கொண்டு வந்த சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் தடை போட்டது போன்ற செயல்களே ஒன்றிய மோடி அரசால் தமிழ்நாட்டிற்கு நிகழ்ந்துள்ளன.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# 2047- ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் பொருளாதாரம்?

2047 - ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ந்த பொருளாதார நாடாக - உலக நாடுகளுள் மூன்றாவது மிகப் பெரிய பொருளாதார நாடாக மாறிவிடும் என்று பிரதமர் மோடி அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்.

ஆனால் இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் சி. ரங்கராஜன் அவர்களின் கருத்தோ வேறு விதமாக இருக்கிறது.

**“2047- ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ந்த பொருளாதார நாடாக மாற வேண்டுமானால் அதிக முதலீடுகளை ஈர்த்திட வேண்டியது அவசியம்.**

**தற்பொழுது இந்தியாவில் தனிநபர் வருமானம் 2000 டாலர். தனிநபர் வருமானக் குறியீட்டில் இந்தியா 142 - ஆவது இடத்தில் இருக்கிறது.”**

**“ தனிநபர் வருமானம் 13,000 டாலராக உயர்ந்தால் மட்டுமே, இந்தியா வளர்ந்த நாடாக மாற இயலும்”**

என்று ரங்கராஜன் விளக்கி இருக்கிறார்.

அப்படியானால் இன்னும் 23 ஆண்டுகளில் தனிநபர் வருமானம் மேலும் அய்ந்தரை மடங்கு அதிகரிக்க வேண்டும்.

இந்தியா விடுதலை அடைந்து, கடந்த 77 ஆண்டுகளில் தனிநபர் வருமானமே 2000 டாலர்தான் என்பதைப் பார்க்கும்போது, அடுத்த 23 ஆண்டுகளில் - அதாவது 2047ல், இந்திய விடுதலையின் நூற்றாண்டில், - தனிநபர் வருமானம் 13,000 டாலர் என்ற மிக உயர்ந்த நிலையை அடைந்துவிட முடியுமா?

**எனவே பிரதமர் கூறிவருவது நனவாகுமா? கனவாகவே காற்றில் கரைந்து போகுமா ? நனவாகாதவற்றையே பிரதமர், நாட்டு மக்களிடம் சொல்லி வருகிறாரா? காலம்தான் சரியான பதில் சொல்ல வேண்டும் !**



தென்காசி தெற்கு மாவட்டம் செங்கோட்டை நகர தி.மு.க. மற்றும் நகர விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு வழங்கும் நிகழ்வு நகரச் செயலாளர் வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் பொ.சிவ பத்மநாதன் பங்கேற்று வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு கோப்பை வழங்கினார்.உடன் ரவிசங்கர்,ரஹீம், சாமிதுரை,வழக்கறிஞர் வேலுச்சாமி, குற்றாலம் குட்டி,காளி,ஜோதிமணி, நடராஜன், மாரியப்பன்,மோகன், சுப்பிரமணியன், காதர்அண்ணாவி, பேபிரசப்பாத்திமா, கருப்பணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




